தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## <u>ஆணை நாள் - 01.09.2026</u>

## <u>முன்னிலை</u>

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 2066/SCIC/2024</u>**

திரு.S.ஆனந்தகிருஷ்ணன் - மேல்முறையீட்டாளர்
தமிழ்நாடு நுகர்வோர் செயல்பாட்டு மையம்
எண்.1/151, G.N.T. ROAD
சோழவரம் - 600 067
திருவள்ளூர் மாவட்டம்.
Phone:73389 62768.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
கூடுதல் காவல் ஆணையாளர்
ஆவடி காவல் ஆணையரகம்
ஆவடி, சென்னை - 600 054.

## <u>ஆணை</u>

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **11.12.2023** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 11.01.2024 |
| 3. | மனுதாரரின் மனு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் | 24.01.2024 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 20.02.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 11/12/2023 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துறை இயக்குநர் அலுவலகம், மைலாப்பூர், சென்னை-4 அவர்களுக்கு அனுப்பி, அதில் “என் வங்கி கணக்கிலிருந்து ரூ.58,500/-ஐ G Pay மூலம் எடுத்து விட்டனர் - தொடர்பாக - மாதவரம் M2 சைபர் கிரைம் காவல் நிலையத்தில் புகார் எண்.370/ 26-12.2022-ல் மனு கொடுத்துள்ளேன் - இது சார்ந்து செங்குன்றம் துணை ஆணையாளர் அலுவலகத்திலிருந்து திரு.வெங்கடேச குமார் 31/10/2023 மாலை 07.30 மணியளவில் இது குறித்து விவரங்களை கேட்டறிந்தார் - இன்று வரை பணம்

கிடைக்கவில்லை - எனது பணம் கிடைப்பதற்கான உதவிகளை செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.” எனக் கோரியுள்ளார்.

2. இன்றைய (01/09/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.S.ஆனந்தகிருஷ்ணன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, திரு.பிராங்க் டி ரூபன், காவல் உதவி ஆணையாளர், செங்குன்றம் சரகம் அவர்கள் ஆஜராகி, இந்த வழக்கின் சாராம்சம் செங்குன்றம் காவல் சரகத்தை சார்ந்தது என்று தெரிவித்தார். மனுதாரர் 26/12/2022 அன்று M2 மாதவரம் சைபர் கிரைம் காவல் நிலையத்தில் O.T.P. எண்ணை பகிர்ந்ததன் அடிப்படையில் ரூ.58,500/-ஐ இழந்துவிட்டதாகக் குறிப்பிட்டு புகார் மனு அளித்துள்ளார் எனத் தெரிய வருகிறது. மேலும் இப்பொருண்மை குறித்து 14/03/2023 தேதியிட்டு காவல் துணை ஆணையாளரிடமும் புகார் மனு அளித்து, தனது மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தை அளிக்கக் கோரியுள்ளார் எனத் தெரிய வருகிறது. மனுதாரரின் மனு, 24/01/2024 தேதியிட்டு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்து கூடுதல் காவல் ஆணையாளர், ஆவடி காவல் ஆணையரகம் அவர்களுக்கு அனுப்பியுள்ளார். எனினும், கூடுதல் காவல் ஆணையாளர், ஆவடி காவல் ஆணையரகம் அவர்கள், மனுதாரருக்கு எவ்வித பதிலும் அளிக்கவில்லை. மனுதாரர், சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் தனது முதல் மேல்முறையீட்டு மனுவினை அனுப்பியுள்ளார். அம்மனுவையும் பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்து 07/02/2024 தேதியிட்டு காவல் ஆணையாளர், ஆவடி காவல் ஆணையரகம் மற்றும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், திருவள்ளூர் மாவட்டம் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளது. **எனினும், அப்போதைய (24/01/2024 தேதிய) பொதுத் தகவல் அலுவலர்/ துணை ஆணையாளர், Dr.K.பாலகிருஷ்ணன் (தற்போது துணை ஆணையாளர், சைபர் கிரைம் செல், மத்தியக் குற்றப்பிரிவு, பெருநகர சென்னைக் காவல்) அவர்கள் எவ்வித பதிலையும் மனுதாரருக்கு அனுப்பவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, Dr.K.பாலகிருஷ்ணன், துணை ஆணையாளர் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம் - 2005, பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக ஆணையத்தில் சமர்ப்பிக்கும்படி உத்தரவிடப்படுகிறது. மேலும், பொது அதிகார அமைப்பு, காவல் துணை ஆணையாளர் அலுவலகம், செங்குன்றம் காவல் மாவட்டம், மனுதாரருக்கு இழப்பீடு ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்குவதோடு, அதற்கான சான்றினையும், மேற்சொன்ன Dr.K.பாலகிருஷ்ணன், துணை ஆணையாளர் அவர்களிடமிருந்து பெறவிருக்கின்ற காரண விளக்க கேட்பு குறிப்பாணைக்கான விளக்கத்தையும் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் 30/09/2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.**

**3. மேலும், பொதுத் தகவல் அலுவலர் / காவல் துணை ஆணையாளர், செங்குன்றம் காவல் மாவட்டம் அவர்கள் மனுதாரருக்கு விரிவான பதில் / தகவல்களை 15/09/2026-க்குள் விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அதன் மீதான நிறைவேற்றுகை அறிக்கையினை 30/09/2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று பணிக்கப்படுகிறார்.**

**4. ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டு அலுவலர் / கூடுதல் ஆணையாளர், ஆவடி காவல் ஆணையரகம் அவர்கள் 25/09/2024 தேதியிட்டு மனுதாரருக்கு அனுப்பிய பதிலில், மனுதாரர் அனுப்பிய புகார் மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தை தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005, பிரிவு 2(f)-ன் படி கோர முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார். இப்பதில்**

**தவறானது. இனி வருங்காலங்களில், மேல்முறையீட்டு அலுவலர்/ கூடுதல் ஆணையாளர், ஆவடி காவல் ஆணையரகம் அவர்கள், தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005-ன்படியான மனுக்களுக்கு உரிய விதிமுறைகளின்படி சரியான பதில்களை அளிக்க வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது. மேற்கண்ட உத்தரவுகளுடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2066/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

1.பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் ஆணையாளர்
ஆவடி காவல் ஆணையரகம்
ஆவடி, சென்னை - 600 054.

2. பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையாளர்,
செங்குன்றம் காவல் மாவட்டம்
GNT Road, Red Hills, Naravarikuppam,
Chennai-600 052.

3.Dr.K.பாலகிருஷ்ணன்
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்
(தற்போது காவல் துணை ஆணையாளர்,
சைபர் கிரைம் செல்,
மத்தியக் குற்றப்பிரிவு,
பெருநகர சென்னைக் காவல்
வேப்பேரி, சென்னை-600 007.

**மேல்முறையீட்டாளர்**

திரு.S.ஆனந்தகிருஷ்ணன்
தமிழ்நாடு நுகர்வோர் செயல்பாட்டு மையம்
எண்.1/151, G.N.T. ROAD
சோழவரம் - 600 067
திருவள்ளூர் மாவட்டம்.
Phone:73389 62768.

நகல்
1.காவல்துறை தலைமை இயக்குநர்
காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகம்
மயிலாப்பூர், சென்னை-600 004.

2.பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035.

RG/Sr.PC